# தமிழின அழிப்புகுறித்துஐ.சி.ஆர்.சிவிரிவான அறிக்கைவெளியிடும்

12-7-1995

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 28 இதழ் 158
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12 - 7 - 1995

[யல்ழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று நாட்களாக இலங்கை இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களினால் பொதுமக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நன்கு உணர்ந்துகொண்டுள்ளது''

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. ஜோர்ஜ் பூண் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;

விமானத் தாக்குதல்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் பொதுமக்கள் பலியான இடங்களையும், காயமடைந்துள்ள மக்களையும் நான் பார்வையிட்டுள்ளேன். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரத்தை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் நன்கு தெளிவாக உணர்ந்துவைத்துள்ளது. இதுபற்றிய விரி

(6ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரத்வத்த பலாலிக்கு விஜயம்!

[கொழும்பு)

வலிகாமம் பகுதியில் நடைபெறும் யுத்தத்தை பார்வையிடுவதற்காக அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று பலாலிக்கு விஜயம் செய்தார்.

இராணுவச் சீருடையில் பலாலிக்கு வந்த திரு ரத்வத்தவுடன் ராணுவதளபதி ஜெரி டீ சில்வா உட்பட பல ராணுவ அதிகாரிகளும் பலாலிக்கு விஜயம் செய்

(5ம பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டைசங்கானைபகுதிகளில்

# இராணுவம் மீது தொடர்ந்து

# புலிகள் உக்கிரமான தாக்குதல்!

## நேற்று மட்டும் 7 படையினர் பலி; 35 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் வட்டுக்கோட்டை சங்கானை பகுதிகளில் முன்னேற்றநடவடிக்கையில்ஈடுபட்டுள்ளஇராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் உக்கிரமான தாக்குதல்களை நடத்திவருகின்றனர். நேற்று நடத்திய தாக்குதலில் மட்டும் ஏழு படையினர் கொல்லப்பட்டதுடன் அதிகாரி உட்பட 35 படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் பலத்த ஷெல் தாக்குதல் மத்தியிலும் இராணுவத்தினரை முன்னேறவிடாது விடுதலைப் புலிகள் தீரமிகு தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இராணுவத்தினரை தொடர்ந்து முன்னேறவிடாது நடத்திய விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் பலத்தஇழப்

(5-ம் பக்கம் பார்க்க)

## எதிர்பாராதவெடிவிபத்தில்; ஐவர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட எதிர்பாராத வெடி விபத்தில் விடுதலைப் புலிப் போராளி ஒருவரும் நாட்டுப்பற்றாளர் நால்வரும் வீரச் சாவடைந்தனர்.

கப்டன் கண்ணாளன் அல்லது ஏரம்பு கந்தசாமி [மட்டக்களப்பு], தசரதராஜகுமார் சந்தனம் [வவுனியா, கனகராயன்குளம்], நடராஜா ராஜபாலன் [காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்].

(2ம் பக்கம் பார்க்க)

## வலி மேற்கில் தொடர்ந்து

# குண்டு வீச்சு; ஷெல் தாக்குதல் பலர் உயிரிழப்பு; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு தொல்புரம், வட்டுக்கோட்டை மேற்குப் பகுதிகளில் நேற்றுக் காலை 7 மணிக்கு புக்காரா குண்டு வீச்சுத் தாக்குதலின் போதும், அப்பகுதிகளில் இடம்பெற்ற பரவலான ஷெல் வீச்சின் போதும் பலர் பலியானார்கள்; பலர் காயமடைந்தனர்.

தொல்புரம் வழக்கம்பரைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சினால் புஷ்பராசா சற்குணதேவி (வயது-35) என்பவர் பலியானார்.

பரவலாக இடம்பெற்ற ஷெல் வீச்சின்போது சங்கா

(6ம் பக்கம் பார்க்க)

## அ,புரத்தில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

[யாழ்ப்பாணம்[

அனுராதபுரம் தலமடுவாவ பொலிஸ் நிலையம்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

(5ம்பக்கம் பார்க்க)

## சுப்பசொனிக், புக்காரா அராலி பாலத்தில் தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று மாலை 6 மணிக்கு கல்லுண்டாய் வெளிப் பகுதியை நோக்கி வந்த புக்காரா விமானம் அராலிப் பாலத்தைக் குறிவைத்து குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது.

அடுத்து அடுத்து 9குண்டுகளை வீசியதை அடுத்து யாழ்ப்

(2-ம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாவைகைப்பற்றும்முன்னோடி திட்டமே தற்போதைய தாக்குதல்!

## பி. பி. ஸி. விமர்சனம்

[லண்டன்]

தற்போது நடைபெறும்இராணுவ நடவடிக்கையானது அராலிக் கரையைக் கைப்பற்றுவதோடு நிறுத்தப்படவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கையா? அல்லது யாழ். குடாநாட்டை இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு பெரும் நடவடிக்கையின்முதல் கட்டமா என்பது கேள்விக்குறியாக உள்ளது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி மேலும் தெரிவித்துள்ளதாவது: இப்போது நடந்து கொண்டிருக்கும் முன்னேறும் பாய்ச்சல் என்ற நடவடிக்கை முழுக் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான

(5-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயம் மீதும் நேற்று ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் பாதுகாப்பு வலயத்தின் மீதும் நேற்று படையினரால் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் ஷெல் மணிக்கூட்டு கோபுரத்திற்கும் யாழ்.

(2ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை கைவிட்டு உடனடியாக அரசு புலிகளுடன் பேசவேண்டும்

## கனடா மீண்டும் கோரிக்கை

(ரொரன்ரோ]

இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் யுத்தம்புரிவதற்கான வழிவகைகளை கைவிட்டுஉடனடியாகசமாதானத்திற்கான முயற்சியில் இறங்க வேண்டுமென கனடா அரசாங்கம் இலங்கைக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் றேமன்ஷே கருத்து வெளியிடுகையில்: இலங்கை அரசாங்கம் மேற்

(6ம் பக்கம் பார்க்க)

# யாழ்.நகரில் 2 பெண்கள் உடல் சிதறிப் பலி!

(யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலை 9-15 மணியளவில் யாழ். நகரை இலக்கு வைத்து மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இருபெண்கள் துடிதுடித்துப் பலியானார்கள்.

யாழ். கோவில் வீதியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கு அருகில் உள்ளவீடு ஒன்றின் மேல் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் வீட்டு குசினிக்குள் சாப்பாடு தயாரித்துக்கொண்டிருந்த மூன்று

(6 ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் 'பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான விஞப் பத்திரம் 1, விஞப் பத்திரம் 2க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். எ-5077

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள்தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும்) (48%) கொடுக்கப்படும். 100 ரேஞியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ். மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (எ 5075

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

### சுப்பசொனிக்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பாணப் பகுதி பெரும் அதிர்வுக்குள்ளானது. இந்த அதிர்விஞல் யாழ். நகர்ப்பகுதிகளில் கூட பல வீடுகளில் தாக்கம் ஏற்பட்டன.

இதனைத் தொடர்ந்து அங்கு விரைந்த சுப்பசொனிக் விமானமும் பேரதிர்வை ஏற்படுத்துமளவிற்கு குண்டு தாக்குதலை நடத்தியது.

இத் தாக்குதல்களைக் கண்டு அஞ்சி அப்பகுதிக்கு அருகிலுள்ள மக்கள் தம் வீடுகளை விட்டு வெளியேறி இடம் மாறிச் சென்றனர். 90-ரி


யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

அறிவித்தல்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள், ஊழியர்கள் தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண நிலை காரணமாக தமக்கோ, தம் குடும்ப அங்கத்தவர்களுக்கோ ஏற்பட்ட உயிரிழப்புக்கள், கடும் பாதிப்புகள் பற்றி உடனடியாக எனக்கு எழுத்து மூலமாக அறியத்தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பதிவாளர்

(எ-5094)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# தெற்கில் பிரேத அறைகளில் பிள்ளைகளைத் தேடும் தமிழ்ப் பெற்ருர்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலிருந்து சீருடைதரித்தவர்களால் கூட்டிச்செல்லப்பட்ட பல தமிழ் இளைஞர்களைப்பற்றித்தகவல் எதுவும் இல்லாமலிருப்பதால் ஆங்காங்கே பிணங்கள் மிதப்பதையும் அடுத்து பெற்றோர் பலர் சவச்சாலைகளுக்கு படை எடுத்துள்ளனர்.

காணமல் போகும் தமிழர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போவதாகவும் இவர்களின் நிலை என்னவென்றே தெரியாமல் இருப்பதாகவும் அறியவருகிறது. இதனல் தெற்கில் தமிழர்கள்பெரும் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

கடந்த 14 ம் திகதி கொட்டாஞ்சேனையில் கைதான வடபகுதி வாலிபர் இருவர் காணுமல் போனதுடன் இதே பகுதியில் வீடியோக்கடை உரிமையாளர் ஒருவரும் ஒட்டோவில் செல்லும்போது ஆயுதப்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேபோல் ஆயுதப்படையினராலும் சிவில் உடையினராலும் ஆயுதமேந்திய சிவில் கோஷ்டியினுலும் அழைத்துச் செல்லப்பட்டுள்ள சண்முகநாதன், எஸ். கிரிஸ்டியன் கே. குருபரன், துரைசிங்கம், மரினே போன்றோரின் விபரம் ஏதும் தெரியவில்லை எனவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. ர-சி


## அவசரகால அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரிவுகளின் உறுப்பினர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் அனைவரையும் 13-07-95 மு. ப. 10-00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் கூடும்படி கேட்டுக் கொள்கின்ரேம்.

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. ச; யாழ். கிளை,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
11-07-1995.

(எ-5097)



இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட அங்கத்துவ நிறுவனங்களுக்கான

## கலந்துரையாடல்

இடம்: கோப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

காலம்: 12 - 07 - 95 புதன் காலை 10-00 மணி.

பங்குபற்றுவோர்:
பாதிக்கப்பட்ட ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஆகியவற்றின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், உச்ச மட்டப் பணியாளர்கள்.

★ கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப. தெ. வ. வடபிராந்தியம்) அவர்கள் கலந்துகொள்வார்.

சா. செல்வரெட்ணம்
தலைவர்
வட மாகாண பனை தென்னை வள
கூட்டுறவு நிறுவனங்களின் சமாசம்

(ஏ-5095)



## அறிவித்தல்

## உலர் உணவு விநியோகம்

வேலணை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் நிவாரணக் கிளைகள் மூலம் வைகாசி இறுதி இருவாரத்திற்கும் ஆனி முதல் இரு வாரத்திற்குமான உலர் உணவுப் பொருட்கள் 10-07-95 தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை பாவனையாளர்களிற்கு அறியத்தருகின்ரேம். தாமதமின்றி உலர் உணவுப் பொருட்களை உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி

கூட்டுறவுச் சேவையிலுள்ள
- பொது முகாமையாளர்

(எ 5096)






(ஏ-5081)


## இராசி பலன்

**12—07—1995**

புதன்கிழமை

[தமிழுக்கு ஆனி—28]

பூரணை மாலை 5-04 வரை, பூராடம் மாலை 6-51 வரை, இராகுகாலம் காலை 11-59 முதல் 1-29 வரை. சுபவேளை மாலை 4-29 முதல் 5-59 வரை. பூரணை விரதம்.

மேஷம்: தவருன வழிநடத்தல், தொழில் கஷ்டம், குழப்பம்.

இடபம்: மனக்கஷ்டம், பெரியோர்கோபம், அலைச்சல்.

மிதுனம்; வாய்ச்சாதுரியம், உறவினர்மகிழ்ச்சி, பணவரவு.

கடகம்: காரியசித்தி, தாய்வழி நினைவு, புதிய நட்பு.

சிங்கம்: மனதி தாங்கல், விரோத உணர்வு, கெட்ட கனவு.

கன்னி: அதிகாரிகள் சினம், அமைதிக் குறைவு, பழைய நினைவு.

துலாம்: சமயோசிதசெயல், தொழில் உற்சாகம், பெண் உதவி.

விருச்சிகம்: குடும்ப வேற்றுமை. மாமஞர்கவலை, மனச் சுமை.

தனுசு; நினைத்ததைச் சாதித்தல், மனமகிழ்ச்சி, புத்திரர் பெருமை.

மகரம்; கருத்து வேறுபாடு, உடல் உபாதை, நோயற்ற வாழ்வு.

கும்பம்: அதிக முதலீடு, தொழில் முன்னேற்றம், பொதுப்பணி.

மீனம்: பிறர் தயவு, இன சன மகிழ்ச்சி. தன்னிலை உயர்வு.

— ஜோஸ்யர்

## ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறையில் ரெலோ உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் மணி எனவும் தெரிவிக்கப் பட்டது.

## மேம்பாட்டு பேரவைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களாள கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் பேரவை உறுப்பினர்களான அதிபர்களையும், கல்வியாளர்களையும் இன்று நடைபெறவிருக்கும் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டத்துக்கு தவருது வருகை தரும் வண்ணம் பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார். -வி

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
போதஞ வைத்தியசாலைக்கும் இடையில் வீழ்ந்துள்ளது.

வீழ்ந்த இந்தச் ஷெல் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இச்ஷெல் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தவல்லது. என்றும் அதிஸ்டவசமாக அதுவெடிக்கவில்லை என்றும் தெவிக்கப்படுகிறது -ரி

### எதிர்பாராத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நடராஜா கணநாதன் [அத்தியடி, யாழ்ப்பாணம்], சோமசுந்தரம் மிதலைகாந்தன் [பூநாறிமடம் யாழ்ப்பாணம்] ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

வீரச்சாவடைந்தோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இலங்கை இராணுவத்துடன் கடந்த மூன்று நாட்களாக நடந்த மோதலில் விடுதலைப் புலிகளின் தரப்பில் இதுவரை 9 போராளிகள் வீரச் சாவடைந்துள்ளார்கள்.

சிங்கராசா அல்லது [பரசுராமன் பகீரதன் மட்டக்களப்பு], ரவீந்தர் [பரஞ்சோதி சிவராஸ், யாழ்ப்பாணம்], மதன் [தேவராசா பகீரதன், யாழ்ப்பாணம்], துஷ்யந்தன் [அன்ரன் ஜேசுரட்ணம் ஜோன்ஸன், முல்லைத்தீவு], திருச்செல்வம் [கந்தையா வாசுதேவன், யாழ்ப்பாணம்], பேரின்பன் [பழனிவேல் மாணிக்கவாசகர், திருகோணமலை]

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

வி-ரி

# 95 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நவாலி சென். பீற்றேஸ் தேவாலயத்தை சுற்றியுள்ள குடிமனைகள் மீது புக்காரா விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட தாக்குதலில் உடல் சிதறிப் பலியானவர்களில் அடையாளம் காணப்பட்ட 69 பேரின் பெயர்கள் வருமாறு:

பி. கபிரியல்பிள்ளை 66வயது, செ. பிறேமலதா 27 வயது, தா. யேசுதாஸ் 21 வயது. சு. இராசம்மா 50 வயது. சு. செல்வரட்ணம் 44 வயது, சி. சண்முகானந்தன் 28 வயது. ச. பராசக்தி 29 வயது, ஜெ. ஜீவதாஸ் 17 வயது, நோ. தேவரஜனி 28 வயது. பு. விதுசன் 6 மாதம், ஆ. குணரட்ணம் 40 வயது. கு. ரேகினி 35 வயது, கு. தர்சினி 14 வயது, கு பிரணவன் 5வயது, அ. கமலாதேவி 45 வயது, க. சாவித்திரி 45 வயது, யூ. யூட்மோகன் 24 வயது, சி. சரஸ்வதி 72 வயது, கோ. ரேவதி 36 வயது, கோ. கபில்தாஸ் 7வயது. கோ. விஞேபா 5 வயது, சி. நாகரத்தினம் 60 வயது, ந. சித்திரபாலா 50 வயது, சி. நாகேஸ்வரி 24 வயது, கோ. மதிவதனன் 22 வயது, சி. தனேஸ்வரி 17 வயது, சி. ஜெயபாலினி 19 வயது. கோ. பிரதீபன் 7 வயது, நா. கோபாலகிருஷ்ணன் 29 வயது, கோ. மதிவதஞ 22 வயது, கோ. ஜந்தன் 9 வயது, பு. சயந்தன் 4வயது, சி. மகேந்திரன் 29 வயது, ஜி. பிரதீபன் 13வயது, இ. தனுசலா 8 வயது, இ. சந்திரகாந்தன் 13 வயது, செ. இராசதுரை 35 வயது, இ. மகேஸ்வரி 34 வயது, இ. சுதா 13 வயது, வி. சற்குணராசா 35 வயது, ப. செல்வரத்தினம் 60 வயது, த. துவாரகாதேவி 20 வயது, தே. நரேஷ்குமார் 17 வயது, நே. திருச்செல்வம் 54 வயது, ஜி சத்தியநாதன், சி. மகேஸ்வரி 27 வயது, சி. மாணிக்கம் 77 வயது, பா. உதயராசா 27 வயது, எஸ்.

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

அன்பற்ற நெஞ்சு, தான் விரோதத்தை நீடிக்க வைத்துக்கொள்ளும்; பிரிந்துபோனதை என்றைக்குமே பிரிவாகச் செய்துகொள்ள வைக்கும்; அன்புள்ள மனதுக்கு அக்கணம் மட்டுமே சச்சரவு. பிறகு எல்லாம் மறைந்து மறுபடியும் கூடிக்கொள்ளும்.

— கன்ஃப்பூசியஸ்.

## நமது நோக்கு

# நீலிக் கண்ணீர்!

இராணுவ நடவடிக்கையினால் யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக வெளியாகும் தகவல்களை அறிந்து ஈ. பி. டி. பி. யினர் அதிர்ச்சியடைந்துள்ளனராம்; யுத்தத்தை உடன் நிறுத்தி மக்களின் உயிர்களைக் காப்பாற்றுங்கள். இது வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை. நாடாளுமன்றத்தில் கடைசியாக அவசரகாலநிலைமை நீடிப்பதற்கு மேற்படி இரு உதிரிக் குழுக்களும் அரசுக்குச் சார்பாக வாக்களித்தவர்கள், வடபகுதியில் அரசு பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாகக் கூறிக்கொண்டுதான் அவசரகாலநிலையை நீடிப்பதற்கு அனுமதி கோரியது. ஆகவே அதை நீடிப்பதற்கு சாதகமாக வாக்களிக்கும்போது வடபகுதியில் போர் நடக்கும்; போர் நடந்தால் மனித அழிவுகள் ஏற்படும் என்றெல்லாம் தெரிந்துகொண்டுதான் அவர்கள் தங்கள் வாக்குகளை அளித்தனர். அவ்விதம் செய்துவிட்டு இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். இதைவிட இவ்விரு குழுக்களும் போரில் தீவிரமாக நேரடியாக பங்குபற்றுபவர்களுமாவர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியும் தன் சார்பில் யாழ். குடாநாட்டின் மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து கவலை தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. ''உள் வட்டத்துக்குள்'' இருந்து செயலாற்றும் கலாநிதி நீலன் திருச்செல்வம் சந்திரிகாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். நீலன் அவர்களுக்கு தமிழ் மக்கள் மீது அக்கறையிருந்தால் தன்னுடைய செல்வாக்கை பாவித்து யுத்தத்தை நிறுத்தி தமிழர்களின் பிரச்னையை வேறுவகையில் தீர்த்துவைக்கும்படி ஆலோசனை கூறியிருக்கலாம். நீலன் திருச்செல்வத்துக்கு தமிழ் மக்களின் பிரச்னை தெரியாது. தமிழர்களின் பிரச்னையை அவர் கொழும்புக் கண்கொண்டுதான் பார்ப்பவர். ஆனால் திரு. சிவசிதம்பரம் அவர்களுக்கு தமிழர்களின் பிரச்னைகளும் போர் மூளும் பட்சத்தில் அவர்கள் எவ்விதம் பாதிக்கப்படுவார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். அவசரகாலநிலையை நீடிக்கும் பிரேரணைக்கு வாக்களிக்கும்படி கூட்டணியின் கிழக்கு நாடாளுமன்ற அங்கத்தவர்களை வற்புறுத்தும் திரு சிவசிதம்பரத்தின் செயல் அவர் எவ்வளவுதூரம் அரச சார்புள்ளவர் என்பதை எடுத்துக்காட்டும்; அவரும் அரசிடம் தனக்கிருக்கும் செல்வாக்கை உபயோகித்து வடபகுதித் தாக்குதலை நிறுத்தியிருக்கலாம். இவற்றை செய்யாதுவிட்டு முதலைக் கண்ணீர் வடிப்பது எதிர்காலத்தில் தமது அரசியல் செல்வாக்கை தக்கவைப்பதற்கேயாகும். ஆனால் அவர்களுக்கு தமிழர் மத்தியில் அரசியல் செல்வாக்கு இப்பவும் இல்லை; இனிமேலும் இருக்கமாட்டாது என்பதும் திண்ணம்.

தமிழர் பிரதேசங்களுக்கு அப்பால் இருந்துகொண்டு அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவளித்துக்கொண்டு அதேநேரத்தில் தமிழர்களின் நலன்களிலும் அக்கறைகொண்டவர்கள் என தம்மை காட்டிக்கொள்பவர்களை தமிழ் மக்கள் துரோகிகள் பட்டியலிலேயே சேர்ப்பர் அவர்களின் போலி ஆதரவு, அக்கறை என்பவற்றிலும் பார்க்க அவர்கள் எதிராளிகளாக செயல்படுவது நல்லது.

''வெள்ளைத் தாமரை'' இயக்கம் மூலம் தன்னை சமாதானப் புறாவாக வெளி உலகுக்கு காட்டும் சந்திரிகா பேச்சுவார்த்தைக் காலத்திலும் இராணுவ நடவடிக்கைக்கே தன்னை தயார் செய்துகொண்டிருந்துள்ளார். அதை அவரே ஏற்றுமுள்ளார். போலியான பேச்சுவார்த்தை நடத்துவதிலும் பார்க்க அவர் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டிருக்கும் போர் சிறந்ததாகும். நண்பன் என்று ஏமாற்றுபவனிலும் பார்க்க எதிரி விசேடம்.

# இராணுவத் தாக்குதலைச் சமாளிக்க 15,000 புலிகள் தயார் நிலையிலாம்

(கொழும்பு)

இராணுவத்தினரின் எந்தவொரு பாரிய தாக்குதலையும் சமாளிக்கும் விதத்தில் 15,000 ற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கொழும்புக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

மேலும் பல நூற்றுக்கணக்கான புலிகள் இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்கத் தயாராயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை மன்னார் தீவிலுள்ள இராணுவ முகாம்களை தாக்குவதற்காக 300ற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் பூவரசங்குளம் காட்டுப் பகுதியில் மறைந்திருப்பதாக புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள முகாம்கள் மீது புலிகள் எவ்வேளையிலும் தாக்குதல் நடாத்தக் கூடும் என்பதால் மன்னார் தீவில் படையினர் மிகுந்த உசார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தது.

-சி

# பல பகுதிகளிலுமிருந்து வடபகுதிக்கு பெருமளவு படையினர் நகர்வு

(கொழும்பு)

கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதியிலிருந்தும் வடபகுதி நோக்கி பெருமளவு படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமான மூலமும் கடல் மார்க்கமாகவும் ஆயிரக்கணக்கான படையினர் இவ்வாறு வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வடக்கின் முக்கிய பகுதிகளில் தரையிறக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

தேசிய பாதுகாப்பு கருதி எவ்வளவு படையினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டனர் அவர்கள் எங்கெங்கு தரித்து நிற்கிறார்கள் என்பது போன்ற தகவல்களை பத்திரிகைகளுக்கு தெரிவிக்க முடியாதென இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வடபகுதியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய இராணுவ நடவடிக்கைக்கான முழு ஏற்பாட்டையும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கடந்த வாரம் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

# படையினருக்கு வாகனங்களை வழங்க வட-மேற்கு மாகாணசபை மறுப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் படையினரின் தேவைகளுக்கென வாகனங்களை வழங்க வட மேற்கு மாகாண சபை மறுப்பு தெரிவித்துள்ளது.

வட- மேற்கு மாகாணத்திலுள்ள நகரசபை, பிரதேச சபைகளின் சகல வாகனங்களையும் இராணுவத்தினரிடம் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அவசர உத்தரவு பிறப்பித்திருந்தது.

வடக்கு-கிழக்கில் யுத்தமுனைகளில் படையினரின் தேவைக்காக இந்த வாகனங்கள் தேவைப்படுவதால் இவற்றை உடனடியாக கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டது.

எனினும் இதற்கு பிரதேச சபைகளும், நகரசபைகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. வட-மேற்கு மாகாண சபை ஐ.தே.க வின் பிடியில் உள்ளதால் அவர்கள் இதற்கு ஆட்சேபனையும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கூடிய ஐ. தே. க.வின் செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டதுடன், முதலில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச சபை, நகரசபை வாகனங்களை இராணுவத்தினருக்கு வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சைக் கேட்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சி

# போர் விமானங்கள், பீரங்கிப் படகுகள் முஸ்லிம் நாடுகளிலிருந்து வருகின்றன

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் உபயோகிப்பதற்கென பாதுகாப்பு அமைச்சினால் கொள்வனவு செய்யப்படும் நவீன யுத்த விமானங்களும் கடற்படகுகளும் ஒருவார காலத்திற்குள் இலங்கை வந்து சேரவுள்ளன. அதே நேரம் முஸ்லிம் நாடுகளில் இருந்து மேலும் இராணுவ உபகரணங்களும், பயிற்சிகள், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் யுத்த நடவடிக்கைக்கு உதவுவதற்கு முஸ்லிம் நாடுகள் பல கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளன. ஈரான், இந்தோனேஷியா, பாகிஸ்தான், மலேசியா முதலான நாடுகளில் இருந்து முப்படையினருக்குத் தேவையான நவீன ஆயுதங்களையும் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்வது தொடர்பாக அந் நாடுகளுக்கு உயர் அதிகாரிகள் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

அதே நேரம் ஏற்கனவே 'ரெண்டர்கள்' அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட நவீன போர் விமானங்களும் கடற்படைப் படகுகளும் இவ்வாரத்துள் இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு முகம் கொடுக்கக்கூடிய வன்மை கொண்ட மிக் ரக போர் விமானங்களான இவற்றில் பல நவீன வசதிகள் இருக்கின்றன.

சீனாவிடமிருந்து கடற்படைக்கென கொள்வனவு செய்யப்பட்ட அதிவேக யுத்தப்படகுகளும் விரைவில் வந்து சேரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ர-சி

## பலதும் பத்தும்

### வாயின் ஒருபக்கம்

''கன்சர்வேட்டிக் கட்சியினர் போல வாயின் இருபக்கத்தாலும் பேசுபவன் நானல்ல''...! என... 1993 டிசம்பர் தேர்தலில் வெற்றி பெற்றுப் பிரதமரான லிபரல் கட்சித் தலைவர் ஜீன் கிறீஷியன் கேலியாகக் கூறினாராம் ஏன் கூறினார்...?

உண்மையிலேயே ...அவர் வாயின் ஒருபக்கத்தால்மாத்திரம் பேசுபவர். சிறுவயதில் ஏற்பட்ட வியாதியால் முகத்தில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டது. அதனால் ... அவரின் வலதுகாது ...செவிடு... வாயின் ஒரு பகுதி இயங்காது...!

தாராள போக்குடைய லிபரல் கட்சியின் தலைவரான இவரின் தந்தையார் குழந்தைச்செல்வத்தைத்தாராளமாகப் பெற்றிருந்தவர். இந்தப் பிரதமர்... 19 குழந்தைகள் உள்ள குடும்பத்தில் இவர் 18வது குழந்தையாகப் பிறந்தாராம்.

—மயூரன்

### ஒன்றுகூடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட இருந்த ஒன்று கூடல் வைபவம் நாட்டு நிலை காரணமாக பிற் போடப்பட்டுள்ளது.

நல்ல தண்ணீர் என்றும் பெற்றிடவே - நாம்
நல்ல மரங்கள் நட்டிடுவோம்.

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு லக்ஸ்பிறே விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினர் ஒரு தொகுதி லக்ஸ்பிறே பைக்கட்டுக்களை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளனர்.

தற்போது வெளியிடங்களில் லக்ஸ்பிறே பைக்கட்டுக்கள் கூடிய விலைக்கு விற்கப்பட்டு வருவதை தொடர்ந்தே புனர்வாழ்வு பகுதி கையிருப்பில் இருந்து லக்ஸ்பிறே பைக்கட்டுக்களின் ஒரு தொகுதியை சங்கங்களுக்கு வழங்கியுள்ளது

அ, உ அட்டைகளுக்கே லக்ஸ்பிறே பைக்கட்டு ஒன்று 62 ரூபா விலையில் சங்கங்கள் மக்களுக்கு வழங்கி வருகின்றன.

170

# வலிகாமம் பகுதியில் இருந்து 4 லட்சம் மக்கள் இடம்பெயர்வு!

## தென்மராட்சியிலும் மக்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மீது இராணுவத்தினர் கடந்த மூன்று தினங்களாக மேற்கொண்டுவரும் பாரிய தாக்குதலினால் நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகள், உடமைகளை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

இவர்கள் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் யாழ். நகரிலும் வலிகாமத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கையால் வலிகாமம் வடக்கு, மேற்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் யாழ். நகரப் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி யாழ். பரியோவான் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, அன்னை திரேசா மகாவித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், அரியாலை பார்வதி வித்தியாலயம் போன்றவற்றில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பாணும் தேநீரும், சமைத்த உணவும் வழங்கப்பட்டுவருவதாக யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினர் தெரிவித்தனர்.

இடம் பெயர்ந்த மக்களில் சிலர் யாழ். நகர புதியசந்தை கட்டிடத்தில் தங்கியிருந்ததையும் காணமுடிந்தது.

### தென்மராட்சியை நோக்கி...

இடம் பெயர்ந்தவர்களில் அதிகமானோர் நேற்று தென்மராட்சி பகுதிகளை நோக்கிச் சென்றனர்.

கால்நடையாக இடம் பெயர்ந்துசெல்லும்மக்களுக்கு மக்கள் வீதியோரங்களில் நின்று தாகசாந்திவழங்கினர்.

### ஆனைக்கோட்டை மக்களும்...

நேற்றைய தினமும் மக்கள் ஆனைக்கோட்டைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூரை நோக்கி வந்தவண்ணமிருந்தார்கள். நேற்றுக்காலை முதல் இவர்கள் மானிப்பாய் வீதியூடாக மூட்டைமுடிச்சுகளுடன் குழந்தைப்பிள்ளைகளை சுமந்தவாறு நடந்தும், துவிச்சக்கரவண்டிகளிலும் நல்லூர்க் கோயிலை அண்டிய பகுதிகளில் வந்து சேர்ந்தவண்ணமிருந்தார்கள்.

இம்மக்கள் இடம்பெயர்ந்து கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க பாடசாலை, மற்றும் நல்லூர் முருகன் ஆலயத்தை அண்டியுள்ள பகுதியில் தங்கியுள்ளார்கள்.

### சாவகச்சேரியில் அதிக அகதிகள்

வலிகாமத்தைச் சேர்ந்த சுமார் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் 9ம் திகதி நள்ளிரவு முதல் தென்மராட்சிப்பகுதிக்குஇடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் பிரதானவீதி எங்கும் மக்கள் நடமாட்டமும் வாகனப்போக்குவரத்துக்களும் வழமையை விட அதிகரித்திருப்பதால்வீதிகள் எங்கும் கண்காணிப்புநடவடிக்கைகளில் காவல்துறையினரும், பொது அமைப்புக்களை சேர்ந்தவர்களும் ஈடுபட்டுள்ளனர்

ஒலிபெருக்கியில் வலிகாம மக்களுக்கு இடம்பெயர்ந்தோர் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்ட வண்ணமுள்ளன.

தென்மராட்சி பாடசாலைகள் எங்கும் அகதிகள் நிரம்பி வழிந்து காணப்படுகின்றனர்.

(90-170-155-கி-சி)

## பொருட்களை எடுக்கச் சென்றவர் இராணுவச் சூட்டுக்கு இலக்கானர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் உடுத்த உடுப்புடன் வெறுங்கையுடன் வெளியேறிய மக்கள் தமது அத்தியாவசிய பொருட்களை எடுத்து வருவதற்காக தமது இருப்பிடங்களுக்கு சென்றுவர முற்பட்டபோது அவர்களைநோக்கி இராணுவம் சுட்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

அளவெட்டியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செ. எட்வின் (வயது 16) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90

# சடலங்களை இனம்காண மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இனம் காணப்படாத நிலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த சிதறிய சடலங்களை இனம் காண்பதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக சவச்சாலைக்கு படையெடுத்தவண்ணமுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு வரை மக்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது.

மக்களின் இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க வைத்தியசாலையின் நேரக்கட்டுப்பாடுகள் கடந்த இரு நாட்களாக தளர்த்தப்பட்டிருந்தன.

அத்தோடு பாஸ்முறைகளும் ரத்துச் செய்யப்பட்டு வைத்தியசாலையின் சகல வழிகளாலும் மக்கள் உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 90 கி

## விஞ்ஞானபீட மாணவியும் விமானத் தாக்குதலில் பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை 2ம் நாள் இராணுவ நடவடிக்கையின்போது விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மூன்றாம் வருட மாணவி ஒருவரும் கொல்லப்பட்டார்.

செல்வி ஜெயந்தா நவரெட்ணம் என்பவரே கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவியாவார். கி சி

## பாதுகாப்புத் தேடி ஓடியவர் வாகனத்தில்'மோதுண்டுபலி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையின்போது ஏற்பட்ட பதற்றங்களினால் வீதியால் பாதுகாப்புத்தேடி ஓடிய ஒருவர் அவசரமாக மிக வேகமாக வந்துகொண்டிருந்த வாகனமொன்றுடன் மோதுண்டு பலியானார்.

இணுவில் பிரதான வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து இணுவிலில் வசித்து வந்த அருளானந்தம் லோகேஸ்வரன் (வயது 15) என்பவரே மரணமானவராவார். 90 கி

## வாகன வசதி இல்லாமையால் நடந்துவந்துசிகிச்சைபெறும் காயக்காரர்கள்

(யாழ்ப்பாணம்)

ஷெல் தாக்குதலினால் காயமடைந்த சிலர் வாகனப் போக்குவரத்து இல்லாததால் சுமார் எட்டுமைல் தூரம் நடந்து ஆஸ்பத்திரியை வந்தடைந்தனர்.

சங்கானையில் காலை நேரத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் காயமடைந்த இவர்கள் சங்கானைப் பகுதியில் இருந்து இரத்தம் சொட்டச் சொட்ட வாகன வசதி எதுவுமின்றி நடந்து மாலை மூன்று மணியளவிலேயே யாழ் ஆஸ்பத்திரியை வந்தடைந்தனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## பாலங்களின் கீழும் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

விமானக் குண்டுவீச்சு, ஷெல்களுக்கு அஞ்சி மக்கள் வீதிகளில் இருக்கும் பாலங்கள், மதகுகளில் தஞ்சமடைகிறார்கள்.

இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் விமானக்குண்டு வீச்சு மேற்கொண்டு வருவதால் இதற்கு பீதியுற்ற இடம் பெயரும் மக்கள் பகல், இரவு நேரத்தில் வீதிகளில் உள்ள பாலங்கள் மதகுகளில் பாதுகாப்புக்கருதி தஞ்சமடைந்தனர். 170-சி

## இராணுவத் தாக்குதலில் கால்நடைகளும் பலி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான கோழிகள், மற்றும் கால்நடைகள் அழிந்துள்ளன.

இராணுவத்தினரின் ஷெல், விமான குண்டு விச்சுக்களுக்கு இலக்காகியே கால்நடைகள் அழிந்திருப்பதாக அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர்.

இதனைவிடவாழைத் தோட்டங்களும் குண்டு வீச்சுக்கு இலக்காகி அழிந்துள்ளன. 170-சி

## ★ இரண்டாம் நாள் நடைபெற்ற ஷெல், விமானத் தாக்குதல்களில் காயமடைந்தோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல், விமான தாக்குதல்களில் படுகாயம் அடைந்தோர் விபரம் வருமாறு:

ரூபசிங்கம் ஜனார்த்தனன் 10 வயது, தேவானந்தன் அனுஷியா 7 வயது சுப்பிரமணியம் விக்கினேஸ்வரி, வரதராசா திலகவதி 21வயது, வைரமுத்துசிவராசா 40வயது சிவராசா உமையாழினி 10 வயது, சிவராசா தட்சாயினி 7 வயது, சுப்பிரமணியம் சிவகாமி 50 வயது, கே. சுந்தரநாதன் 45 வயது, சாந்தலூஷியா 63 வயது, எஸ். காண்டீபன் 14 வயது. திருமேனி கிருபாகரன் 10 வயது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். பரமேஸ்வரன் 25 வயது, எஸ். குமார் 35 வயது, தியாகராசா பிரிந்தா 23 வயது, ப. தங்கரத்தினம் 25 வயது, சபாரத்தினம் 63 வயது ஆகியோரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த கி. நாகேஸ் 30 வயது, ரி துஷ்யந்தன் 14 வயது, ரி துஷ்யந்தினி 20 வயது, அளவெட்டியைச் சேர்ந்த சண்முகலிங்கம் 48 வயது, சின்னையா 70வயது ஜீவானந்தன் 8 வயது, நவாலியைச் சேர்ந்த ருக்குமணி 24 வயது, பிரதீபன் 12 வயது, சசி 28 வயது, பி மகேஸ்வரன் 34 வயது, செ. கவிதா 14 வயது, நாவாந்துறையைச் சேர்ந்த செல்வராசா 24வயது மல்லாகத்தைச் சேர்ந்த நாகேஸ்வரி 32 வயது வட்டுக்கோட்டையயில் எஸ் பூபாலசிங்கம் 35 வயது, சித்தன் கேணியில் ரவிக்குமார் 11 வயது, அகலந்தன் 18 வயது. சுப்பிரமணியம் 26 வயது, சங்கானையில் முருகேசு செல்லம்மா 48 வயது, கந்தையா செல்வந்தராணி 38 வயது. அராலியில் நாராயணசிங்கம் நித்தியானந்தலக்ஷ்மி 50 வயது நாராயணசிங்கம் பரணீதரன் 20 வயது. நாராயணசிங்கம் தரணீதரன் 18 வயது, இராசகுலசிங்கம் ராஜ்குமார் 16 வயது. கட்டுடையில் பொன்னையா வைத்திலிங்கம்75வயது மூளாயில் தம்பு நாகம்மா ஆகியோரும்.

புக்காரா குண்டுவீச்சினால் கொக்குவில் கேணியடியில் கே இராசலிங்கம் 44 வயது, இராசலிங்கம் ஞானேஸ்வர தேவி 42 வயது, இரத்தினம் பாலாம்பிகை 72 வயது, கிருஷ்ணமூர்த்தி கலைவாணி 44 வயது, சிற்சபேசன் கேந்திரகுமார் 36 வயது, கணேஷ் நடேசகுமார் 36 வயது, ஜி. பத்மநாதன் 41 வயது, கேசவன் 10 வயது. ஆர். ஜனார்த்தனன் 11 வயது, ஆர். அகல்யா 20 வயது, பி. அரவிந்தன் 15 வயது, கமலாம்பிகை 42 வயது, இராசேந்திரன் 64 வயது, சுதா 21 வயது, விஸ்வலிங்கம் 75 வயது, தினேஷ் 10 வயது ஆகியோரும், தாவடியில் கே. கோமதி 25 வயது, என். சுபாஸ்கரன் 29 வயது, இன்னாசிமுத்து ராஜினி 20 வயது, குருசாமி மகேஸ்வரி 55 வயது, செல்லத்துரை 39 வயது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கந்தசாமி ருக்மணி தேவி 45 வயது, அவரது பிள்ளைகளான கந்தசாமி றமீளா 12 வயது, கந்தசாமி தினேகா 10 வயது, கந்தசாமி சோபனா 9 வயது, கந்தசாமி ஜீவகாந்தன் 7 வயது ஆகியோரும் இணுவில் பகுதியில் த. அன்னலக்ஷ்மி 40 வயது, தி. சரஸ்வதியம்மா 65 வயது, ச. காண்டீபன் 14 வயது, சி. சிவானந்தன் 38 வயது ஆகியோரும், சங்கரத்தையில் திருநாவுக்கரசு மகாதேவி 67 வயது. திருநாவுக்கரசு ஜெய்குணேஸ்வரி 20 வயது ஆகியோருமே காயமடைந்தவர்களாவர்.

[90-கி-சி]

### கிளிநொச்சியில்

## ஷெல் தாக்குதலில் பலியானோர் தொகை ஐந்தாக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கிளிநொச்சிப் பகுதிகளை நோக்கி கடந்த வெள்ளிக் கிழமை மேற்கொள்ளப் பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலின் போது படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கிளிநொச்சி கோணவிலைச் சேர்ந்த பிரான்ஸிஸ் சிங்ஸ்லி (வயது 28) என்பவரே மரணமானவராவார்.

இவருடன் இச்சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

90- கி-சி

# மூன்று மாதத்தில் 800 படையினர் பலி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு போர்முனையில் கடந்த மூன்று மாதங்களில் 800ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருப்பதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் சண்டே லீடருக்குத் தெரிவித்துள்ளார்.

அரச தரப்பு இக்காலப்பகுதியில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 520 என கூறுகின்ற போதும் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 800ற்கும் அதிகமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் ஆயிரம் படையினர் படுகாயமடைந்துள்ளதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-கி

# அகதிகள் மீதான தாக்குதலுக்கு உடன் விசாரணை நடாத்துக

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவமும் விமானப் படையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாக மேற்கொண்டுவரும் மக்கள் குடியிருப்புக்கள், இந்துக் கோவில்கள், தேவாலயங்கள் மீதான கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் இந்துசமயப் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது,

இத்தாக்குதல்களினால் 250 ற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமான மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் மூன்று லட்சம் மக்கள் தங்கள் உடமைகளைக் கைவிட்டு ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்

நவாலி சென் பீற்றேர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற விமானத் தாக்குதலால் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள பொய்த் தகவல்களைக் கண்டிப்பதுடன் இது சம்பந்தமாக உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகாவைக் கேட்டுள்ளனர்.

மேலும் பொதுமக்கள் தஞ்சமடையும் இந்து ஆலயங்கள் ஏனைய மதவழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். ரசி

# தெற்கில் நிலைமைகளைச் சமாளிக்கவே வடக்கில் பாரிய தாக்குதலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்வரும் 15ம் திகதிக்குள் ஒழிக்க முடியாத நிலையில் தெற்கில் எழும் எதிர்ப்புகளை சமாளிக்கவே ஜனதிபதி சந்திரிகா வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளாராம்.

எதிர்வரும் 15ம் திகதிக்குப் பின் தெற்கில் குழப்பங்களை ஏற்படுத்த ஜே. வி. பியினர் திட்டமிட்டுள்ளனர். இந் நிலையில் வடக்கில் பாரிய தாக்குதலை நடாத்துவதன் மூலம் தெற்கில் நிலைமைகளை சமாளிக்க ஜனதிபதி திட்டமிட்டுள்ளார்.

இதே வேளை வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில் அடுத்த ஓரிரு தினங்களில் ஜனதிபதி தனது தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது. வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை நடைபெறும் போது தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் அதிலும் சில லாபங்களை பெறலாமென அவர் கருதுகிறார்.

திருமதி. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை வரவேற்கும் நிலையில் தற்போது தென்பகுதி மக்கள் இல்லை என்றும் செய்திகள் கூறுகின்றன. சி

# வீதியோரங்கள், மரங்களின் கீழும் பெருமளவு அகதிகள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வலி-மேற்கு, வலிவடக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரக்கணக்கானோர் அகதிமுகாம்களில் இடவசதியின்மையால் மரங்களின் கீழும், வீதியோரங்களிலும், மைதானங்களிலும் தங்கியிருக்கின்றனர்.

யாழ். நகர்ப் பகுதியில் சகல பாடசாலைகளிலும், கோவில்கள், தேவாலயங்களிலும் அகதிகள் நிரம்பி வழிவதால் சுமார் ஒரு லட்சம் பேர் வரை தென்மராட்சி நோக்கிச் சென்றுள்ளனர்.

ஏனையவர்கள் யாழ்நகர்ப் பகுதியும், தென்மராட்சி செல்லும் வழி நெடுகிலும் மரங்கள், வீதியோரங்கள், மைதானங்கள் மற்றும் இடங்களில் தங்கியிருப்பதை காணக்கூடியதாயுள்ளது.

தென்மராட்சி நோக்கி பல மைல் தூரம் வயோதிபர்களும், குழந்தைகளும் நடந்தே செல்கின்றனர். கைக் குழந்தைகளையும் மூட்டை முடிச்சுகளையும் சுமந்தவண்ணம் செல்லும் பெண்களின் நிலைமை பெரும் பாதிப்பாகவே உள்ளது. இராணுவத் தாக்குதலிலிருந்து உயிர்தப்பும் நோக்கில் தாங்கள் இவ்வளவு வேதனைகளையும் தாங்கவேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். -சி

### வாகன வசதி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் காயமடைவர்களான மு. செல்லம்மா (வயது 48), க. செல்வந்தராணி (வயது 30) ஆகிய இருவருமே இவ்வாறு காயத்துடன் நடந்துவந்து யாழ, வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். 90 கி

# கடற்படை, இராணுவத் தளபதிகளின் சேவைக்காலம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

கடற்படை இராணுவ தளபதிகளின் பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா நீடித்துள்ளார்.

இராணுவ தளபதி ஜெரி டி சில்வாவின் பதவிக்காலம் அடுத்த மேமாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமரசேகராவின் பதவிக்காலமும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படவுள்ளது. இவர் இந்த வருடம் நவம்பர் மாதத்துடன் கடற்படைத் தளபதியாகி மூன்று வருடங்கள் முடிவடைகிறது. இவரது பதவிக்காலம் அடுத்த மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது.

தற்போதைய யுத்த சூழ்நிலையில் இவ்விரு தளபதிகளினதும் சேவை அவசியமாகத் தேவைப்படுவதால் இரு தளபதிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா பதவி நீடிப்பு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

# ‘பரா’ வெளிச்சத்துடன் படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு பரா வெளிச்சம் பாய்ச்சி கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஷெல்கள் பாரிய சத்தத்துடன் கரையோரப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதனைவிட வலிகாமம் பதிகளை நோக்கியும் இராணுவத்தினர் நள்ளிரவு வரை தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். ஷெல்கள் பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன.

வட்டுக்கோட்டை, அராலி, நவாலி, சண்டிலிப்பாய் சித்தன்கேணி போன்ற பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. 170-சி

### யாழ். குடாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கை என இராணுவ ஆய்வாளர்கள் பலர் கருதுகின்றனர்.

இந்த நடவடிக்கை மேற்கில் காரைநகரும், தெற்கில் ஊர்காவற்றுறையுடன் இணைக்கப்பட்ட குடாநாட்டின் கணிசமான பிரதேசத்தைப் பலப்படுத்திக்கொண்டு, அங்கிருந்து வடகிழக்குப் புறமாக அச்சுவேலியில் இருந்தும் யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியை நோக்கி, அடுத்த கட்டப் பல்முனைப் படை நடவடிக்கை நடைபெறலாம் என்றும் இராணுவ ஆய்வாயர் கூறுகின்றனர்.

செப்டம்பர் இறுதிக்குள் இந்த நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்டு இராணுவம் தன் நிலையைப் பலப்படுத்தும் என கருதப்படுகிறது.

இதைச் செய்து முடிக்க அரசிடம் போதிய படைபலம் உண்டா என்பதும் கேள்வியே?

ஏனென்றால் விடுதலைப் புலிகள் போரின் திறனையும், வளர்ச்சியையும் அதிகம் சேதத்துக்குள்ளாகாமல் நடந்து கொண்டால் குடாநாட்டைத் தக்க வைத்துக் கொள்ள தற்போது உள்ளதிலும் பார்க்க கூடுதலாக படை பலம் தேவைப்படும் என்றும் பி. பி, சி தெரிவித்தது. -ம-ரி

## கூட்டம் கூட்டமாக நிற்பதை தவிர்க்குமாறு கோரிக்கை!

[யாழ்ப்பாணம்]

''இலங்கை அரசின் விமானப்படையினரும், இராணுவத்தினரும் யாழ்ப்பாண மக்களை குறி வைத்து குண்டு, ஷெல் வீச்சுக்களை நடாத்தி வருவதனால் பொதுமக்கள் வீதிகளில் கூட்டமாக நிற்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்''

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பொதுமக்கள், அநாவசியமாக வெளியில் கூட்டம் கூட்டமாக நிற்பதை தவிர்த்துக்கொள்வது நல்லது. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் வீதிகளில் நிற்காமல் இடம்பெயர்ந்தோருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் இருப்பது நல்லது. இங்கு இவர்களுக்கு வேண்டிய அனைத்துவசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நிற்பதினால் குண்டு வீச்சிக்களாலும் ஷெல் தாக்குதல்களாலும் படுகாயமடைபவர்களை வாகனங்களில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றது. என்றும் கூறினர். -வி-ரி

### 95 சடலங்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசாமி 48 வயது, பி. கேதீஸ்வரன் 17 வயது, ஆர். யுதீஸ்தா 15 வயது, எஸ். இராசம்மா 71 வயது, பி. உதயகுமார் 35 வயது, கு. உசாந்தினி 12 வயது, பி.நாகமுத்து 75 வயது, உ. சஜிக்குமார் 13 வயது, கே. தேவராசா 53 வயது, கே. அஞ்சனாதேவி 36 வயது, ஆ யோகேஸ்வரி 35 வயது, பி. வன்னியசிங்கம் 57 வயது, ப, இந்திரகுமார் 18 வயது, கா, தவச்செல்வி 10 வயது, வே, லீலாதேவி 35வயது, சு. ஜேயசீலன் 49 வயது, க. தேவகுலசிங்கம் 35 வயது, மா. ஆனந்த அழகன் 16 வயது, ம. வசிகரன் 16 திவயது, . சுஜிவா 17 வயது. 90 . 170-சி

### அனு

★ ஏ. கே. இலகுரக துப்பாக்கு -2
★ ரி-56 ஒன்று ரக துப்பாக்கி - 1
★ ரிப்பீற்றர் - 1
★ ஷொட் கன் - 6
★ ஏ. கே. துப்பாக்கி ரவைக் கூடுகள் - 10
அதற்குரிய ரவைக்கூடு தாங்கியணிகள் - 2
★ ஏ கே. இலகுரக இயந்திரத் துப்பாக்கி ரம் ரவைக்கூடுகள் - 7
★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கிலிங்குடன் -600
★ நடுத்தரரவைகள்-1320
★ 410 மில்லி மீற்றர் எறிகணைகள் -40
★ 60 மில்லி மீற்றர் எறிகணை -1
★ கிற்பாக் -8
★ நீரேந்து குண்டு -1
★ ஜே. ஆர். கைக் குண்டு -9
★ கண்ணீர் புகை தண்டு -10
★ பராலைற் -10
★ சின்னல் கைக்குண்டு -42
★ தொலை தொடர்புசாதனம் -2
★ காட்றிச் -25
★ 60 மில்லி மீற்றர் பூஸ்டர் பெட்டி -1
★ பொலிஸ் தொப்பி -21
★ தண்ணீர் கொள்கலன் -5
★ அதற்குரிய தாங்கி அணிகலன் -15
★ விநியோக தாங்கி அணி -6
★ புகைப்படக் கருவி - 1
★ தலைக்கவசம் - 15
★ பொலிஸ்பட்டிகள் - 11
★ இராணுவப்பட்டிகள் - 12
★ இராணுவ சப்பாத்து -20 சோடி
★ இராணுவ சாதாரண சப்பாத்துக்கள் 25 சோடி
★ பொலிஸ் சீருடைகள் - 45

இத்தாக்குதலின்போது 3 பொலிசாரும் 2 ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டமை ஏற்கனவேதெரிந்ததே. [க-ரி]

### வட்டுக்கோட்டை

(1ம் பக்கத் தொடர்சி)

புலிகளைச் படையினர் சந்தித்து வருகின்றனர். நேற்று மட்டும் ஏழு ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் அதிகாரி உட்பட 35படையினர் படுகாயமடைந்ததாகவும் அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 71 படையினர் காயமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. வி-ரி

## இலக்கதகடு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கு பிரதேச சபையினால் வளர்ப்பு நாய்களுக்கு இலக்க தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவைகளை வலி-கிழக்கு பிரதேச சபை உப அலுவலங்களான நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், புத்தூர், அச்சுவேலி அலுவலங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வலி-கிழக்கு பிரதேச சபை செயலர் திரு. மு.க. குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## சேவை நலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை பிரதம லிகிதர் திரு. இ. பூபாலசுந்தரம் இளைப்பாறியுள்ளார். இவர் முன்பு யாழ். அபிவிருத்திச் சபை, வேலணைபிரதேச சபை, நல்லூர் பிரதேசசபை, பூநகரி பிரதேச சபை, மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது இவரின் சேவையைப் பாராட்டி யாழ்ப்பாண மாநகர சபையினர் பிரிவுபசாரம் ஒன்றை நடாத்தி கௌரவித்தனர்.

### அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்சி)

திருந்தனர்.

திரு. ரத்வத்த இராணுவ அதிகாரிகள் சகிதம் தற்போது யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்குச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது -ரி

# இனம் காணப்படாத 24 சடலங்கள் நேற்று தகனம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி சென். பீற்றஸ் தேவாலயத்துக்கு அருகில் உள்ள கட்டிட இடிபாட்டுக்குள் இருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் அடையாளம் காணப்படாத 24 சடலங்கள் நேற்று இந்து சமய ஆசார முறைப்படி தகனம் செய்யப்பட்டது.

ஆஸ்பத்திரி பிரேத அறையில் இருந்த சடலங்களை நேற்றுவரை உறவினர்கள் அடையாளம் காணாத பட்சத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் உதவியுடன் யாழ். நோயாளர் நலன்புரி சங்கம் சடலங்களை அரியாலையில் உள்ள செம்மணி மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனம் செய்தது.

ஒருசில சடலங்கள் அடையாளம் காணப்பட்டும் சடலங்களை பொறுப்பேற்று கிரியைகள் நடத்துவதற்கு வசதிகள் இல்லாததை அடுத்து உறவினர்களின் உதவியுடன் அந்த சடலங்களும் தகனம் செய்யப்பட்டது.

பிரேத அறையில் குளிர்சாதனப் பெட்டி இல்லாததினால் சடலங்கள் தூர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்தே சடலங்களை தகனம் செய்யும் வேலையில் ஆஸ்பத்திரி நிர்வாகம் ஈடுபட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட மேலும் 11 சடலங்கள் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த சடலங்களை உறவினர்கள் அடையாளம் காணாதவிடத்து இவை இன்று புதன்கிழமை மாலை தகனம் செய்யப்படும் என்று யாழ் போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

170-90 ரி

# கொழும்பில் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினமிரவு பொலிஸாரை நோக்கி இனந்தெரியாதவர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் இரு தமிழ் இளைஞர்கள் உடன் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களென சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று முன்தினமிரவு மூன்று தமிழ் இளைஞர்கள் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடியதையடுத்து பொலிசாரால் இவ் இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்ட இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இவர்களுள் ஒருவர் தப்பிவிட்டதாகவும் எஞ்சிய இருவரையும் பொலிசார் துரத்திச் சென்றே கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-ரி

# புலிகளின் குரலை தொடர்ந்து தெளிவாக கேட்கலாம்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலி சேவையை இராணுவத்தினர் திட்டமிட்டு குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போதும் மேற்படி சேவை வழமை போல நடைபெற்று வருகின்றது.

புலிகளின் குரல் வானொலி சேவை இடம்பெறும் எவ். எம். மீற்றர் அலைவரிசையில் ராணுவத்தினர் வேறு நிகழ்ச்சிகளை நடத்தி குழப்ப முயல்கின்றனர். பொதுமக்கள் எவ். எம். அலை வரிசையை திருப்பி திருப்பி கேட்பதன் மூலம் புலிகளின் குரலை தெளிவாக கேட்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. -ரி

# நவாலி தேவாலய தாக்குதலுக்கு மனித உரிமைக்குழுக்கள் கண்டனம்

(கொழும்பு)

''நவாலி சென். பீற்றஸ் தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடாத்தியது மிகவும் கொடூரமானது'' என்று மனித உரிமைக் குழுக்களும் செய்தியாளர்களும் கண்டித்துள்ளனர்.

தேவாலயங்களிலும், கோவில்களிலும் பொதுமக்களை தஞ்சம் புகும்படி இராணுவம் கூறிவிட்டு அந்த இடங்களில் குண்டுகளை வீசியமை இராணுவத்தின் திட்டமிட்ட ஒரு செயலாகும் என மனித உரிமைக் குழுக்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேநேரம் மேற்படி தேவாலயத்தின் மீது 9 குண்டுகள் வீசப்பட்டதினால் பலத்த சேதம் ஏற்பட்ட சம்பவம் உண்மைதான், என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

ஆனால் இது வேண்டுமென்று செய்யப்பட்டதா? அல்லது தற்செயலாக நடைபெற்றதா? என்பது தமக்கு சரியாகத் தெரியவில்லை, என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேலும் கூறியுள்ளது.

இச்சம்பவத்தை இலங்கை அரசு மறுத்து வருவதாக வெரித்தாஸ் நேற்று கூறியது. வி-ரி

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விலங்கியற்றுறையில் நடைபெறவுள்ள உடற்றொழியல் பட்டறை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. -ரி

## தமிழின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வான அறிக்கை ஒன்றை தயாரித்து, கொழும்பு ஊடாக ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயலகத்துக்கு அனுப்பியுள்ளேன். யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை எமது தலைமைச் செயலகம் உலகுக்கு விரைவில் விரிவாக வெளியிடும்.

யாழ். நகரிலுள்ள எமது தலைமைச் செயலகத்துக்கு அருகில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததினால் எமது ஊழியர் ஒருவரின் மனைவி உடல் சிதறி இறந்துள்ளார். இதனால், நாம் எமது செயலகத்தை மூடிவிடவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ போவதில்லை. எமது செயலகம் இதே இடத்தில்தான் தொடர்ந்து இயங்கும். அதுடன் எமது கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாப்பு வலயமும் தொடர்ந்து பேணப்பட்டு வரும்.

இச்சம்பவங்கள்பற்றி பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கும் தெரிவித்துள்ளேன். இதற்கான பதில்கள் எதையும் இலங்கை அரசு எமக்கு இதுவரை தெரிவிக்கவில்லை எனக் கூறினார். [வி-ரி]

# நவாலி தாக்குதல்; சந்திரிகா கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டமை குறித்தும் பொதுமக்கள் பெருமளவில் கோரமாக கொல்லப்பட்டமை குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ், பெர்னாண்டோவிடம் தமது கவலையை தெரிவித்தார்.

தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட ஜனாதிபதி அதிமேற்றிராணியாரிடம் வினவிய பொழுது இச்சம்பவம் குறித்து அதிகாரபூர்வமான தகவல் ஏதும் கிடைத்ததா எனவும் வினவினாராம்.

இதற்கு பதிலளித்த அதிமேற்றிராணியார் யாழ்ப்பாணம் மேற்றிராணியாரிடமிருந்து இது சம்பந்தமான செய்தியை நாம் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து விசாரணை செய்யுமாறும் படையினருக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் கொழும்பு அதிமேற்றிராணியாரிடம் ஜனாதிபதி தெரிவித்தார். -க-ரி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. -ரி

## தமிழீழ நிர்வாக சேவையாளருக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையில் பணிபுரியும் சகல சேவையாளர்களையும் இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவைக் காரியாலயத்திற்கு தவறாது வருகை தருமாறு நிர்வாகப் சேவை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ரி)

## யுத்தத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்ட படைநடவடிக்கைகள் 12 வருடங்களாக தொடரும் ஆயுத போரை முடிவுக்கு கொண்டுவரும் தீர்வைக் கொடுக்க இயலாது என்றும் அமைதிக்கான தீர்வை முன்வைக்கும் முயற்சியில் தீவிரமாக இலங்கை அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த அவர் சமாதானம் குறித்த இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு கனடா அரசாங்கத்தின் ஆதரவு எப்போதும் உண்டு என தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-ரி

# காயமடைந்தவர்களில் மூவர் உயிரிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல், மற்றும் விமான குண்டு வீச்சு தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூவர் நேற்று இறந்துள்ளனர்.

தர்மலிங்கம் சுஜீபா (வயது 16), பா. செல்லம்மா (வயது 34), சுழிபுரம் மு. பொன்னம்பலம் (வயது 40) நவாலி ஆகியோரே நேற்று மரணமானவர்கள்.

இதேவேளை ஷெல், விமானக் குண்டுவீச்சுக்கு இலக்காகி கொல்லப்பட்டவர்களில் மேலும் சிலரின் சடலங்கள் நேற்றுக்காலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

மா. பரராஜசிங்கம் (வயது 42) மானிப்பாய், ஜ. பவளம் (வயது 70) சங்கானை, சரசு (வயது 75) சங்கானை, க. நாரயணசிங்கம் (வயது 50) வட்டுக்கோட்டை, வி. கிருஷ்ணகுமார் (வயது $1\frac{1}{2}$) பண்டத்தரிப்பு, வி. சுஜிவா (வயது 17) நவாலி, பி. அன்னலட்சுமி (வயது 78) ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டவையாகும். (170-ரி)

## அவசர முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்

வடமராட்சிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆண்டு 9க்கு மேற்பட்ட மாணவர்களுக்கான அவசரமுதலுதவிப் பயிற்சியும், செய்முறையும் இன்று காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் நடைபெறும்,

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்கு சகல மாணவர்களையும், ஆர்வமுள்ள ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சென். ஜோன் அம்புலன்ஸ் பிரிவின் வடமராட்சி பிரதேச ஆணையாளர் கேட்டுள்ளார்.

பங்குபற்றுபவர்கள் தங்கள் மதிய உணவு, வெள்ளைத் துணிகள், முக்கோணக் கட்டுத் துணிகள், மட்டைகள் ஆகியவற்றைக் கொண்டு வருமாறு கேட்கப்படுகின்றனர். -சி

## மக்கள் வங்கி அதிகாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தில அமைந்துள்ள மக்கள் வங்கி கிளைகளிலும், சுன்னாகம் கிளையிலும் கடமையாற்றும் முகாமையாளர்கள், அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள் ஆகியோரை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிரதேச தலைமை அலுவலகத்திற்கு வருமாறு பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார். (ரி)

## வைத்தியசாலை ஊழியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையின் காரணமாகப் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இந்நிலைமையைச் சமாளிப்பதற்கு உங்கள் அனைவரினது சேவையும், ஒத்துழைப்பும் அத்தியாவசியமானது. சுகாதார சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கடமைக்கு உடனடியாகச் சமூகமளிக்கும்படி பண்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன. இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (90, 179-ரி)

## வலி மேற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லையில் பவளம் (வயது-70) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

புக்காரா விமானத்தாக்குதலின் போது தொல்புரம் பகுதியில் என். புஷ்பராசா (45-வயது] இவரின் மனைவியே இறந்தவராவார்) தம்பிஐயா அருள்தாஸன் (20 - வயது. (தொல்புரம்) வலது கால் துண்டிக்கப்பட்டார். கே. தயாகாந்தன் [16-வயது[, வட்டுக்கோட்டை மேற்கு, கே. தேவரஞ்சனி (17-வயது] தொல்புரம், வீ. கேசவன் [32- வயது[ வழக்கம்பரை, எஸ். கந்தசாமி [62-வயது) வட்டுக்கோட்டை மேற்கு ஆகியோரும் சங்கானையில் இடம்பெற்ற ஷெல் வீச்சின் போது பி. மகேஸ்வரி (52 வயது), வனிதா (37 வயது), ஆகியோரும் கொக்குவிலில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின்போது சிவஞானவதி (62 வயது), யு. விஜிதா ஆகியோரும், மானிப்பாயில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் எஸ். சிவானந்தன் (14 வயது) என்பவரும் அராலி மத்தியில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் கே. புஸ்பராணி (30 வயது), என். விக்னேஸ்வரன் (30 வயது) ஆகியோரும், சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சினால் ஆர். மாரிமுத்து (75 வயது) என்பவருமே காயமடைந்தவர்களாவர், [90-ரி]

## யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளின் தாயாரான செபஸ்ரியாம்பிள்ளை சுசிலா தேவி (வயது 42) என்பவர் உடல் சிதறி பலியானார்.

இவரது கணவர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது,

இதேவேளை யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடொன்றில்வீழ்ந்துவெடித்த ஷெல்லினால் குசினியில் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த செல்வி இரத்தினபூபதி சுப்பிரமணியம் [45 வயது) உடல் சிதறி ஸ்தலத்தில் பலியானார். வீடு பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்ஷெல் வீழ்ந்து வெடித்த வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் யாழ். இந்துக்கல்லூரி, இந்து ஆரம்பபாடசாலைகளில் வலிகாமம் வடக்குத் தெற்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கு தஞ்சமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நாயன்மார்கட்டு நாயன்மார் வீதியில் உள்ள குளம் ஒன்றிலும் நேற்றுக்காலை பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் விழுந்து வெடித்தது குறிப்பிடத்தக்கது. (162-170-175 90ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [நிர்வாகத்]தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.